# அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
# கறம்பக்குடி - 622 302

---

## <u>பத்திரிகைச் செய்தி</u>

19-12-2023, புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தமிழ் வளர்ச்சித் துறை, கம்பன் கவிமன்றம்,IQAC மற்றும் ஜெர்மனி தமிழருவி வானொலி இணைந்து கல்லூரிக் கலையரங்கத்தில் கலை இலக்கியச் சந்திப்பு என்ற தலைப்பில் கருத்து பரிமாற்றம் நடைபெற்றது.

விழா துவக்கத்தில் மாணவ மாணவிகள் தமிழ்த்தாய் வாழ்த்து பாட தமிழ்த்துறை கௌரவ விரிவுரையாளர் ப.இந்திரா காந்தி நிகழ்ச்சியினைத் தொகுத்து வழங்கினார். தமிழ்த்துறை கௌரவ விரிவுரையாளர் முனைவர் மா.ரெங்கநாயகி வரவேற்புரை நல்கினார். கல்லூரி முதல்வர் (பொறுப்பு) இணைப்பேராசிரியர் முனைவர் ந. சுலோச்சனா தலைமை ஏற்று நடத்தினார். ஜெர்மனி தமிழருவி வானொலி இயக்குனர்கள் தமிழவேள் நயினை விஜயன் மற்றும் தமிழ்ச் சுடர் சசிகலா விஜயன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு விழாவினைச் சிறப்பித்தார்கள்.

மணமேல்குடி கவிஞர் கவி. வெண்ணிலவன் மற்றும் புதுக்கோட்டை மாட்சிமை தங்கிய மன்னர் கல்லூரி இணைப் பேராசிரியர் முனைவர் ஆ.சகாதேவன் வாழ்த்துரை வழங்கினார்கள். IQAC ஒருங்கிணைப்பாளர்கள் விழா ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

விழாவில் கல்லூரியில் பணியாற்றும் அனைத்து பேராசிரியர்களும், அலுவலகப் பணியாளர்களும், மாணவ மாணவிகளும் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பித்தனர். கல்லூரி முதுகலைத் தமிழ்த்துறை கௌரவ விரிவுரையாளர் முனைவர் மு.சசிக்குமார் நன்றி உரை நவில மாணவ மாணவிகள் நாட்டுப்பண் பாட விழா இனிதே நிறைவுற்றது.

# அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி

# கறம்பக்குடி - 622 302



# அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி

# கறம்பக்குடி - 622 302

